[1993 மார்ச் 23

3. வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்தவுடன் ஒரு பிரச்சினையை எழுப்பும் நடைமுறை—தலைவரின் தீர்ப்பு.

திரு. இளம்வழுதி : சார், நான் ஒன்றை எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி எனக்கு எழுதிக் கொடுங்கள். நான் அடுத்த பிரச்சினைக்குப் போய் விட்டேன்; எழுதிக் கொடுங்கள்; நான் அது பற்றிப் பிறகு சொல்கிறேன்.

திரு. இளம்வழுதி : முக்கியமான பிரச்சினை, உங்களோடு ஒத்த கருத்துள்ள பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை இல்லை, என்னோடு ஒத்த கருத்துள்ள பிரச்சினை என்ற காரணத்தால் எந்த நேரத்திலேயும் எழுப்பக் கூடாது. உட்காருங்கள் (குறுக்கீடு) அடுத்த பிரச்சினையை எடுக்க இருக்கிறேன்.

திரு. இளம்வழுதி : இந்தி படித்தால் தான் ஆல் இந்தியா ரேடியாவிலே வேலை என்ற நிலைமை இருக்கிறது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அது பற்றி எழுதிக் கொடுங்கள். அதை உரிய முறையில் எழுதிக் கொடுத்தால் தான் அதை எடுத்துக் கொள்வது பற்றி உங்களுக்கு அனுமதி அளிக்க முடியும். உட்காருங்கள்.

(ஆ) திருநெல்வேலி அருகே கள்ளச்சாராய லாரியை மடக்க முயன்ற காவல்துறை அதிகாரி இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநெல்வேலி அருகே கள்ளச் சாராய லாரியை மடக்க முயன்ற காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் இறந்தது பற்றிய ஒரு பிரச்சினை. இதைப் பேரவையில் எழுப்புவதற்கு அனுமதி கோரி திரு. தே. குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திருமதி ரமணி நல்லதம்பி, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. தாமரைக்கனி ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை இன்று அனுமதிக்கிறேன் என்று ஏற்கனவே நான் சொல்லி இருந்தேன். இன்று அதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர அனுமதிக்கிறேன். அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமசுப்பு.